## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் வாகன திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆந் பந்தியின் ஏற்பாடுக்கமைய வருமானம் கிடைப்பதற்குரிய 2018 ஆண்டின் பாதிடப்பட்ட பெறுமதிகள் நிதிக்கூற்றுக்க ளில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றிக்கையின் ஏற்பாடுகளுக்க மைய அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்ககூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மேற்படி சுற்றறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் மாதிரியில் ஏசீஏ - 1 மாதிரியினுள் நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கரிய தகவல்கள் மற்றும் ஏசீஏ - 1 (i) மாதிரியில் ஆண்டின் ஆரம்ப நிலுவை வரி மீதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | சுற்றிக்கை ஏற்பாடுகளுக் கமைய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | |

ல. மேலும், நிலுவை வரி வருமானக் குறியீட்டிற் கமைய வேறுபடுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

---------------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் பெறுமதி சேர் வரி வருமானம் திறைசேரியால் பேணிச் செல்லப்படும் கட்டுப்பாட்டு கணக்கிற்கு செலவு வைக்கப்படும். அவ்வாறே செலவு வைக்கப்படும் பணம் மாதாந்த கணக்கு பொழிப்புகளினூடாக நிதி சேவைகள், ஏனைய சேவைகள் மற்றும் உற்பத்தி ஆகிய மூன்று வரி வருமானக் குறியீடுகளுக்கு கணக்கு வைத்தல் இடம்பெறும். மாதாந்த கணக்கு பொழிப்புகளினூடாக கணக்கு வைக்கப்பட்ட பின் மீளாய்வாண்டின் இறுதியில் கட்டுப்பாட்டுக் கணக்கில் எஞ்சியிருந்த ரூபா 8,606,788 ஆன தொகை வருமானக் குறியீடுகளுக்கமைய இனங்காணப்படாது பெறுமதி சேர் வரி ஏனைய சேவை வருமானக் குறியீட்டிற்கு மாற்றல் பத்திரத்தினூடாக செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சரியான வருமானக் குறியீடு இனங்காணப்படாமையால் உரிய மூன்று வருமானக் குறியீடுகளினதும் தேறிய வருமானத்தின் சரியான | வருமானங்கள் சரியாக இனங்காணப்பட்டு, குறியீடுகளுக்கமைய வகைப்படுத்தப்பட்டு சரியான வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்பது | பதில் வழங்குவதற்காக 2 மாத காலம் கோரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | நிதிக்கூற்றுகளுக்கமைய மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட பங்கு பரிமாற்றல் வரி ரூபா 1,196,346,653 ஆன போதிலும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு திணைக்களத்தினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 1,200,413,567 ஆனமையால் ரூபா 4,066,914 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. அந்த இணக்கமின்மைக்குரிய காரணங்களை கண்டறிந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | சேகரிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படும் வருமானம் அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படும் இணக்கமின்மைகளை உரிய பிரிவுகளுக்கு அறிவித்து காலரீதியில் தீர்க்கப்பட வேண்டும் என்பது | மாதத்தின் இறுதியில் இடம்பெறும் பெறுவனவுகள், அதற்கடுத்த மாதத்தின் ஆரம்பத்தில் கணக்கு வைக்கப்படுகின்றமையால் இந்த வேறுபாடு ஏற்படக்கூடும் என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | வாகன உரித்து வரிக்குரிய திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் எண்ணிக்கை தொடர்பில் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வாகனத் தொகுதிக்கமைய கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் போது மீளாய்வாண்டின் வாகன உரித்து வரி ரூபா 2,695,261,000 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களுக்கமைய வாகன உரித்து வரி ரூபா 2,191,685,363 ஆனமையால் ரூபா 503,575,637 ஆன இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது. | | மாதாந்த வங்கிக்கு செலவு வைக்கப்படும் வரித் தொகை மற்றும் சுங்கத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அறிக்கை ஆகியவற்றிடையே வேறுபாடுகள் நிலவுகின்றமையும், அதற்கான காரணங்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) வருமானத்தை சேகரிக்கும் வங்கிக் கணக்குகளினூடாக திறைசேரிக்கு செலவு வைக்கப்படும் பணம், வங்கிக் கணக்கு அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்பட்டு, வேறுபாடுகள் இனங்காணப்பட்டு அவற்றை திருத்துவதற்கு காலரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | குறித்த குறைபாடுகள் வேலை விடயங்களாக உத்தியோகத்தர்களுக்கு முன்வைக்கப்படுதலும், அவற்றை நிறைவு செய்வதற்காக சுமார் 2 மாதங்கள் எடுக்கின்றமையும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

**1.6.3 நிதி நிலமைக்கூற்று**

------------------------------

**(அ) நிலையான சொத்துக்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 502 (2) இன் பிரகாரம் நாளதுவரையா க்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிராததுடன், பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சொத்துக்கள் தொடர்பான உரிய சான்றுபடுத்தலின்றி சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் மூலம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், சிகாஸ் | பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அனைத்து சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டு சிகாஸ் கணனி கட்டமைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளுடன் அல்லது நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் இணக்கம் செய்யப்பட்டு சரியான தன்மை உறுதி செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல். | 2019 யூலை 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நாளதுவரையாக்கப்பட்ட அறிக்கையொன்றினை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக. |

நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் உள்ளடக் கப்பட்ட வதிவேடுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மரணமடைந்த அல்லது சேவையை கைவிட்டுச் சென்ற 04 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 614,335 கூட்டுத்தொகையான நிலுவை கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல். | சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதன் மூலம் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| (ii) | நிலுவையாகவிருந்த கால எல்லை 20 வருடத்தைக் கடந்துள்ள ரூபா 189,773 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் நிலவியதுடன், அந்த கடன் மீதிகளுக்குரிய கோவைகளோ அல்லது பதிவேடுகள் எவையும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | உரிய தகவல்களை தேடி கடன்பட்டோர் தொடர்பான தகவல்களை பெற்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2008 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல் காரணமாக கோவைகள் சேதமடைந்துள்ள தாக மற்றும எடுக்கப்பட வேண்டிய மேற்படி நடவடிக்கைகள் தொடர்பில் நிதி அமைச்சின் குறித்த பிரிவுகளிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களில் உரிய வைப்புகளை செலுத்துதல் மற்றும் மீதிகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பொது வைப்புக் கணக்குகள் 04 இல் காணப்படும் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 714,562,813 கூட்டுத்தொகையான வைப்பு மீதிகள் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | உரிய மீதிகளை தீர்ப்பனவு செய்ததன் பின்னர் 2019 மே 30 ஆந் திகதியில் உள்ளபடியாக தொடர்ந்தும் தீர்க்கப்பட வேண்டிய மீதி ரூபா 464,562,814 என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றிக்கை 5.1 (அ) மற்றும் 5.2 இன்பிரகாரம் திட்டவட்டமான பரிமானக் குறியீட்டின் கீழ் இனங்காணப்படக்கூடிய அனைத்து பெறுவனவுகளும் உரிய வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,141,170 கூட்டுத்தொகையான பெறுவனவுகள் உரிய வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்படாது, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது வைப்புக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 1.6.4 நிலுவை வருமானம் தொடர்பான கூற்று

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் நிலுவை வரி அறிக்கைகளுக்கமைய பெறுமதி சேர் வரி (நிதி சேவைகள்) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (நிதி சேவைகள்) வருமானக் குறியீடுகளுக்குரிய முறையே ரூபா 11,797,951,411 ஆன மற்றும் ரூபா 581,903,358 ஆன நிலுவை வரி காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அந்த மீதி | நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிலுவை வரி அறிக்கைகளை தயாரிக்கும் போது கணக்கு மீதிகள் கைவிடப்படல் இடம்பெறுவதில்லை என்பதனை உறுதிப்படுத்தும் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்தல். | நிலுவை மீதிகளை உள்ளடக்கிய திருத்தப்பட்ட நிலுவை வரி அறிக்கையொன்றை சமர்ப்பதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கைவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2015 நவம்பர் 15 அல்லது அதற்கு முன்னராக நிறுவனமொன்றிலிருந்து ரூபா 1,000 மில்லியன் படி 04 கெசினோ வியாபாரங்களிலிருந்து ரூபா 4,000 மில்லியனாக சூதாட்ட கைத்தொழில் வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அவற்றுள் ரூபா 1,025 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,975 மில்லியனான பணம் மீளாய்வாண்டின் போதும் நிலுவை வரியாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வரியை அறவிடுதலும், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அனைத்து நிலுவை வரியும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது | வரியை அறவிடும் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது. |
| (இ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட அறிக்கைகளுக்கமைய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான தேறிய நிலுவை மற்றும் தண்டப்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,608.2 பில்லியன் ஆகும். அந்த பணத்திலிருந்து அறவிடப்படக்கூடிய நிலுவை வரித் தொகையாக இனங்காணப்பட்டுள்ள ரூபா 287.5 பில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டிற்குரிய மற்றும் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான வரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அறவிடல்கள் தற்காலிகமாக இடை | நிதிக்கூற்றுக்களினுள் நிலுவை வரி அறிக்கையிடும் அடிப்படை கணக்கீட்டு கொள்கையினுள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது. | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியீல் உள்ளபடியான திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வரி அறிக்கைகள் தவறுகளுடனானது என்பது, |

| | | |
|---|---|---|
| நிறுத்தப்பட்டுள்ள ரூபா 1,320.6 பில்லியன் நிலுவை வரி தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

**1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை.**

திணைக்களத்தினால் கீழ்க்காணப்படும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

| | <u>**பரிந்துரை**</u> | <u>**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**</u> |
|---|---|---|
| <u>**அடியிதழ் பத்திர பதிவேடு**</u> | | |
| நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் அடியிதழ்சேர் பத்திரப் பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும், அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 341 இன் ஏற்பாடுகளுக்கமைய ஜீ.ஏ.என் 20 மாதிரியின் பிரகாரம் அடியிதழ் சேர் புத்தகங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலவும் மீதிகளை அடிப்படையாகக் கொண்டு அடியிதழ்சேர் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்தது. |
| <u>**பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடுகள்**</u> | | |
| அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டியின் பிரகாரம்குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டியின் பிரகாரம் குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்றுபேணப்பட வேண்டும். | 2019 சனவரி முதல் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 1.6.6 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் கணக்காய்வு சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **திணைக்களத்தின் கருத்துரைகள்** |
|---|---|---|
| திணைக்களம் மீளாய்வாண்டின் போது முன்வைக்கப்பட்ட 6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடப்பட முடியாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 67,676,679 ஆகும். | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாப் பதிவேடானது உரிய காலத்தின் பின் பரிசோதிக்கப்பட்டு கிடைக்கப்பெற்றுள்ள கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அந்த வினாக்களுக்கு உடனடியாக பதில்கள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு பதில்கள் வழங்கத் தாமதமாகும் வினாக்கள் காணப்படுமாயின் அவற்றுக்காக இடை அறிக்கையொன்றினை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இடை பதிலொன்று வழங்கப்பட்டுள்ளதுடன், வினாக்ககளுக்குரிய வரியாளர்கள் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு வேலை விடயங்கள் வழங்கப்பட்டுள்ளதாக |

### 1.6.7 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு, அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொண்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் அறிவுரைகளுக்கமைய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டதாக. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 85(1) (இ) மற்றும் நிதிப்பிரமாணம் 128(2) (அ) இன் பிரகாரம் வருமான மதிப்பீடுகள் பூரணமானதெனவும், கூடியளவு நடைமுறைச்சாத்தியமானதாக மற்றும் சரியானதாகவும் தயாரிப்பதற்கு அரசாங்க வருமானக் கணக்கீட்டு உத்தியோத்தர்கள் முயற்சி செய்ய வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு வருமான மதிப்பீடுகளை கூடியளவு விரைவாக சரியானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக. | ஆரம்ப வருமான மதிப்பீட்டு பெறுமதிகள் திறைசேரியால் வழங்கப்படுவதாக |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், மீளாய்வாண்டின் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருடாந்த வருமான மதிப்பீடு ரூபா 1,028 பில்லியனான போதிலும், உள்ளவாறான சேகரித்தல்கள் ரூபா 853.9 பில்லியன் ஆனமையால் ரூபா 174.1 பில்லியனால் விலகலொன்று காணப்பட்டதுடன், அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 16.9 சதவீதமானதாகும். அதன் பிரகாரம் வருமானங்களை மதிப்பீடு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | திணைக்களத்தினால் 5 வருமானக் குறியீடுகளின் கீழ் வருமானங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிராத போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த 5 வருமானக்குறியீடுகளின் கீழும் ரூபா 156.1 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு வருமான மதிப்பீடுகளை கூடியளவு விரைவாக சரியானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக. | இந்த வருமானக் குறியீடுகளின் கீழ் நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் மாத்திரம் அறவிடப்படுவதாக |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்ட நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம் Legacy கட்டமைப்பில் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலுவை வரி மற்றும் தண்டப்பண மீதி முன்னைய வருடத்திற்கு ஒப்பாக ரூபா 291.6 பில்லியனிலிருந்து ரூபா 128.8 பில்லியன் வரை ரூபா 162.7 பில்லியனால் குறைவடைந்திருந்தது. எனினும், புதிய வரி நிர்வாக கட்டமைப்பில் முன்னைய ஆண்டில் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலுவை வரி மீதிகள் இல்லாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த மீதியானது ரூபா 1,191.7 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. | தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள் ள நிலுவை வரித்தொகை அவற்றை இடைநிறுத்துவதற்கு காரணமாகவுள்ள விடயங்களை பரிசோதித்து துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | Legacy கட்டமைப்பின் கீழ் நிலவும் வரியினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதாகவும் புதிய வரிக் கட்டமைப்பிற்கு உரியதாக முன்னைய ஆண்டில் இடைநிறுத்தப்பட்ட வரி அறிக்கையிடப்பட்டிருக் கவில்லை. |
| (ஈ) | நிலுவை வரி அறிக்கைகளுக்கமைய, மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக Legacy கட்டமைப்பின் கீழ் அறவிடப்படக் கூடிய வரித்தொகை முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக ரூபா 32 மில்லியன் முதல் ரூபா 147.2 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன், புதிய வரி | அறவிடப்படக்கூடிய நிலுவை வரித் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | நிலுவை வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதாக. |

| | | | |
|---|---|---|---|
| | நிர்வாக கட்டமைப்பின் (RAMIS) அறவிடப்படக்கூடிய வரி மீதியானது ரூபா 17.8 பில்லியன் முதல் 140.3 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. அறவிடப்படக் கூடிய வரித்தொகை அதிகரித்திருந்த போதிலும், அவற்றை அறவிடுவதற்காக திணைக்களத்தினால் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | 2010 இன் 16 ஆம் இலக்க கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட வரியினை தீர்ப்பனவு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைய முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வரித் தொகையிலான அதிகரிப்பு 3 சதவீதத்தை விட குறைவான அல்லது ரூபா 23.7 பில்லியனை விட குறைவாக பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த மீதியானது ரூபா 130.5 பில்லியன் ஆகும். அதற்கமைய, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு அறவிடக்கூடிய நிலுவை வரித்தொகைகளை அறவிட்டு அதிகார சட்டத்திற்கு இனங்கியொழுக வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வரி அறிக்கை குறைப்பாடுகளுடனதாக காணப்படுகின்றமையால் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. |
| (ஊ) | 2015 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிரந்தரமாக நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லும் எந்தவொரு இலங்கை பிரசையும் அந்த பிரசைக்கு நாட்டியிருந்தது. வெளியே கொண்டு செல்வதற்காக விடுவிக்கப்பட்ட அந்நிய செலவானியின் அடிப்படையில் இருபது சதவீதமான குடியகல்வு வரி அறவிடும் ஏற்பாடொன்று விதிக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டின் பொது குடியகல்வு வரியாக ரூபா 16,682,442 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் செலவாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் தொடர்புற்று நிரந்தரமாக நாட்டை விட்டுச் செல்லும் நபர்களை இனங்காணல் மற்றும் அவர்களால் நாட்டிலிருந்து கொண்டு செல்லப்படும் அந்நிய | வரி அடிப்படையினை சரியாக இனங்காணும் நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரி அடிப்படையினை இனங்காணும் நடைமுறையொன்றினை தயாரிப்பதாக. |

செலவாணியின் அளவினை உறுதிப்படுத்தி வரி ஈட்டத்தினை அதிகரிக்கும் பொறிமுறையொன்று அல்லது நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கு திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செலவின முகாமைத்துவம்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50(II) இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் முடியுமான அளவிற்கு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் மேலதிக நிதிகளை பெற்றுக்கொண்டு மற்றும் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்கள் மூலம் 10 செலவின விடயங்களின் பாதீட்டு மதிப்பீடுகள் 13 சதவீதம் முதல் 125 சதவீதம் வரையான வீச்சில் வேறுபட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு மதிப்பீடுகளை முடியுமானளவு சரியானதாகவும் முழுமையானதாகவும் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | கோரப்பட்ட நிதியேற்பாடு கிடைக்காமை, வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டு எல்லையினுள் செயற்படல், மூலதன செலவின விடயங்களுக்காக முதலாவது காலாண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமை போன்ற விடயங்கள் நிதியேற்பாடு எஞ்சியிருந்தமைக்கு தாக்கம் செலுத்தியிருந்ததாக. |
| (ஆ) | 3 மூலதன செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 15.5 மில்லியன் கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாட்டில் எவ்வித பணமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 06 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,456.6 மில்லியன் கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 739.2 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால் சேமிப்பானது ரூபா 717.3 மில்லியனாக இருந்ததுடன், அந்த சேமிப்பானது தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 68 சதவீதமான வீச்சினை உடையதாகும். | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடுகள் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது. | மூலதன வடிவிலான பழுதுபார்த்தல்கள் ஏற்படாமை மற்றும் பெறுகை நடவடிக்கைகள் நிறைவடையாமை போன்ற காரணங்கள் நிதியேற்பாட்டிலான சேமிப்பிற்கு தாக்கமளித்திருந்தமை. |

### 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் கிடைத்துள்ள ரூபா 2,813.8 மில்லியன் கூட்டுத்தொகையான முத்திரை வரி வருமானங்கள் மாகாண சபைக்கு அனுபப்படாது பொது வைப்புக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணம் மாகாண சபைக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது. | 2019 மே 25 ஆந் திகதியளவில் இந்த மீதியில் ரூபா 500 மில்லியன் தீர்க்கப்பட்டுள்ளதாக |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு முறையான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தின் செயலாற்றலினை கணிப்பிடுவதற்காக நிதிச் செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) நிறுவப்பட்டிராததுடன், பிரிவுகளுக்கான வருமான சேகரிப்பு இலக்குகள் வழங்கப்பட்டிருந்ததன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய வருமான இலக்குகள் மற்றும் அவற்றை சேகரிக்கும் செயல் முன்னேற்றம் அறிக்கைகளின் பரிசோதனையின் போது பிரிவுகள் மற்றும் 33 பிரதேச அலுவலகங்களின் வருமான சேகரிப்பு இலக்கினை அடைதல் 7 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சினுள் காணப்பட்டது. | திணைக்களத்தின் செயலாற்றலினை கணிப்பிடுவதற்காக நிதிச் செயலாற்றல் குறிகாட்டிகள் நிறுவப்பட்டு அதற்கமைய செயலாற்றலினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

-----------------------------------------------------

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையினை பரிசோதித்து பார்த்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத செயன் முன்னேற்றங்கள் தொடர்பில் பரிசோதிப்பதற்காக மீளாய்வாண்டிள் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை அல்லது அதன் வரைபொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக் களுடன் செயலாற்றல் அறிக்கையின் பிரதியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | பிரிவுகள் மற்றும் பிரதேச அலுவலகங்களிலிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியமையும், மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அறிக்கைகளின் தகவல்களை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். என்பதால் செயலாற்றல் அறிக்கையினை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக. |

**3.3 உள்நாட்டு நிதியங்களினால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினை புதுப்பிப்பதற்கு மற்றும் 9 மாடிகளைக் கொண்ட வாகனத் தரிப்பிடமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 1,430.5 மில்லியனான உடன்படிக்கைத் தொகைக்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 1.399.7 மில்லியனான தொகை கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் கட்டிடத்தின் புதுப்பித்தல் பணிகள் மற்றும் வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்குரிய அனைத்து பணிகளும் உப ஒப்பந்தாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை நிறைவு செய்யும் செயன் முன்னேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தாது திணைக்களத்தினால் | ஒப்பந்ததாரரிடமிருந்து உரிய புதுப்பித்தல் பணிகள் மற்றும் வாகனத்தரிப்பிடத்தின் நிர்மாணப் பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | வாகனத் தரிப்பிடத்தினை நிர்மாணித்தல் தொடர்பில் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையொன்றினை பெற்றுக்கொண்டுள்ளதாக மற்றும் அதற்கமைய தர்ப்பிடத்தின் பணிகளை |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருந்தமையும், கூட்டுத்தாபனத்தினால் உப ஒப்பந்ததார்களுக்கு உரிய முறையில் பணம் செலுத்தப்பட்டிராமையும், புதுப்பித்தல் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிராததுடன், வாகனப் பிரிவும் 2019 மே 15 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் என்பது. | பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரித் திணைகளத்திற்காக 20,000 – 25,000 கன அடிகளுக்கு இடைப்பட்ட அளவிலான கட்டிடமொன்றினை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைக்கேள்வி கோரப்பட்டிருந்தது. இரண்டு விலைக்கேள்வியாளர்கள் மாத்திரம் விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்ததுடன், அவற்றில் அளவானது 25,000 சதுர அடியை விஞ்சியிருந்தமையால், நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தின் அளவானது 30,025 சதுர அடிகள் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திருத்தப்பட்ட புதிய நிபந்தனைகளின் கீழ் விலைக்கேள்வி கோரப்பட்டு வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்படாது, பெறுகைகள் வழிகாட்டிக்கு முரணாக பழைய நிபந்தனைகளின் கீழ் மதிப்பாய்வு செய்யப்பட்டு ரூபா 3.7 மில்லியனான மாதாந்த வாடகையின் கீழ் 30,025 சதுர அடிகளான கட்டிடமொன்று 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த கட்டிடத்தினுள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தப் பிரிவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத கட்டிடத்திற்காக வாடகை செலுத்தல், பாதுகாப்பு கோவைக் கட்டணங்கள், விலைக்கேள்வி கோரல் செலவினம் ஆகியவையும் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் போது ரூபா 5.08 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அது விளைவற்ற செலவினமொன்றாகியிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது மற்றும் அரச நிதியினை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனுடனும் பயன்படுத்த இல்லக்கூடிய வகையில் முகாமைத்துவ தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது | திணைக்களத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரைகள் மற்றும் அமைச்சின் பெறுகைகள் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மதிப்பீட்டு அறிக்கைகளை கோரி கட்டிடத்தினை வாடகைக்கு எடுத்ததாக மற்றும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கட்டிடத்தினுள் பிரிவுகள் தாபிக்கப்படாமையால் 2019 மார்ச் 13 ஆந் திகதி கட்டிடம் மீள கையளிக்கப்பட்டுள்ளதாக. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகத்தின் கட்டிடத்தினை புதுப்பிக்கும் போது திணைக்களத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த 02 டிரான்ஸ்போமர் இயந்திரங்கள் 2010 ஆம் ஆண்டு முதல் 2019 மே 15 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக சொத்துக்கள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என்பது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதாக. |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 7,985,992 தொகையான செலவினம் மேற்கொண்டு திணைக்களத்தினுள் பொருத்தப்பட்டுள்ள CCTV கமாராக்கள் 70 அத்திகதி முதல் 2019 மே 15 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | தலைமை அலுவலகத்தின் புதுப்பித்தலின் போது தீயணைப்பு உபகரணத் தொகுதிகள் கட்டிடத்தினுள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் அவற்றின் செயற்படுநிலை உறுதிப்படுத்தப்பட்டு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விசேட ஏற்பாடு) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய மதுபானம் மற்றும் போத்தல் கல் விற்பனைக்கான ஏதேனுமொரு வியாபாரமொன்று அல்லது வியாபாரமொன்றினை நடாத்திச் செல்வதற்காக வெளியிடப்படும் அனுமதிப்பத்திரமொன்றின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டு முதல் ரூபா 10,000 மற்றும் 2013 ஆம் ஆண்டு முதல் ரூபா 20,000 படியான முத்திரைக் கட்டணமொன்று பிரதேச செயலகங்களினூடாக அறவிடப்பட வேண்டும். 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் மதுபான அனுமதிப்பத்திரங்கள் 04 மற்றும் போத்தல் கல் அனுமதிப்பத்திரங்களை | 2008 ஆம் ஆண்டு முதல் ஒக்தோபர் 1 வரையான காலப்பகுதிக்குரிய பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் அறவிடப்பட | குறித்த நிலுவை முத்திரை கட்டணங்களை அறவிடுவதற்கான அறிவுரைகள் உள்ளடக்கப்பட்ட சுற்றறிக்கையொன்று வரைபாக்கப்பட்டுள்ளதாக. |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடும் போது அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10 சதவீதம் அல்லது ரூபா 2,000 ஆகிய இரண்டில் கூடிய பணத்தை முத்திரைக் கட்டணமாக அறவிடப்பட வேண்டும் என விடயப்பொறுப்பு அமைச்சரால் வர்தமானி அறிவித்தலொன்றின் மூலம் கட்டளையிடப்பட்டிருந்தது. எனினும், அந்த கட்டளையை வெளியிடுவதற்கு முன்னர் அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் ஒருவரின் அறிவுறுத்தல்களுக்கமைய 2008 ஆம் ஆண்டு முதல் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி வரையிலும், 04 வகையான மதுபான அனுமதிப்பத்திரங்களுக்காக மற்றும் போத்தல் கல்லுக்காக அனுமதிப்பத்திரங்களை வெளியிடும் போது குறித்த ஆண்டில் நிலவிய உப பிரமாணங்களின் அடிப்படையில் முத்திரைக் கட்டணங்கள் அஅறவிடப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கமைய மீளாய்வுக் காலப்பகுதியினுள் பெருமளவிலான முத்திரை வரி வருமானம் அரசிற்கு இழப்பாகியிருந்தது. | வேண்டிய முத்திரை வரி வருமானத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | |
| (ஆ) | வரியாளர்களால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்படும் காசோலைகள் மதிப்பிழக்கும் போக்கு அதிகரித்தவாறு உள்ள போதிலும், அதனை சரிப்படுத்துவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பிழந்த காசோலைகளுக்காக பணம் அறவிடும் போதும் மந்தகதியில் செயலாற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இவ்வாறு மதிப்பிழந்து காணப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கை 7,295 ஆக இருந்ததுடன், அவற்றின் பெறுமதி ரூபா 2,550 மில்லியன் ஆகும். | மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய வரியிறுப்பாளர்கள் தொடர்பில் ஏற்பாடுகளின் பிரகாரம் தேடிப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், மதிப்பிழந்த காசோலைகளுக்காக பணம் அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும். | மதிப்பிழந்த காசோலைகளுக்காக பணம் அறவிடல் இடம்பெறுவதாக. |

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2008 திசெம்பர் 24 ஆந் திகதிய அமப/08/2253/338/043 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் வர்த்தக விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் செலசினே நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், புதிய உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தை நடைமுறைப்புடுத்துவதற்குரிய விளம்பர பணிகள் அந்த நிறுவனத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக ரூபா 93,064,6897 கிரயமான அனைத்து அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் பிரச்சார பணிகள் திணைக்களத்தின் பிரச்சாரக் குழுவொன்று மற்றும் பெறுகைகள் குழுவினால் விளம்பர நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் செயற்பட வேண்டும் என்பது. | செலசினே நிறுவனம் முன்வைத்த வேலைத்திட்டம் திணைக்களத்திற்கு பொருந்தவில்லை. செலசினே நிறுவனம் கூறுவிலையினை அறிவித்திராமை, நேரடியாக ஊடக நிறுவனங்களினூடாக மேற்கொள்ளும் போது கிரயத்தினை குறைத்துக்கொள்ள முடிகின்றமை போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு திணைக்களத்தால் விளம்பர நடடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்ததாக. |
| (ஆ) | செலவின முகாமைத்துவம் தொடர்பில் சனாதிபதி செயலகத்தினூடாக வெளியிடப்பட்ட 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்டீ/81/40 ஆம் இலக்க கடிதம் மற்றும் அதற்குரியதாக அவ்வப்போது வெளியிடப்பட்ட கடிதங்களின் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் நடாத்தப்படும் செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளை நடடாததுவதற்காக ஹோட்டல்கள் தெரிவு செய்யப்படக்கூடாது என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் திணைக்களத்தினால் புதிய வரி அதிகாரச்சட்டம் தொடடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 15 ரூபா 21,582,215 செலவிடப்பட்டு ஹோட்டல் மற்றும் விழா மண்டபங்களில் நடாத்தப்பட்டிருந்தது. | செலவின முகாமைத்துவம் தொடர்பில் சனாதிபதி செயலகத்தினூடாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் களன் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆகக் குறைந்த செலவினத்தை மேற்கொண்டு ஊச்ச நலன்களை பெறக்கூடியவாறு பெறுகை நடைமுறையொன்று மற்றும் நிதிப்பிரமாணங்களை பின்பற்றி ஹோட்டல்களில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதாக. |
| (இ) | புதிய வரி அதிகாரச்சட்டம் தொடர்பில் அறிவூட்டும் விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்தும் போது | வருமானம் சேகரிப்பதற்காகன | அறிவூட்டடல் நிகழ்ச்சித்திட்டங்களை |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தினால் துழைவுச் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டு ரூபா 7,240,500 தொகை சேகரிக்கப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வருமானம் சேகரிப்பதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அதிகாரமளிப்பதற்குரிய கடிதங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது வருமானம் சேகரிக்கப்படக்கூடாது என்பது. | வெற்றிகரமாக நடாத்துவதற்காக நுழைவுச் சீட்டுகளை விற்பனை செய்ததாக. |

## 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டிராமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| பெறுமதி சேர் வரியினை அறிவிடல் தொடர்பில் வெளியிடப்பட்ட 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 03 மாதங்களை கடந்த போதிலும், இறுதி பதில்கள் வழங்கப்பட்டிராமை. | கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள விட யங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்து துரிதமாக இறுதி பதில்கள் வழங்க வேண்டும் என்பது. | இடை பதில்கள் வழங்கப்பட்டுள்ளதாக மற்றும் வினாவின் விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளதாக. |

## 3.9 <u>முகாமைத்துவ நலிவுகள்</u>

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| (அ) 2010 இன் 16 ஆம் இலக்க கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட வரி தீர்ப்பனவு (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புதிய பிரிவொன்றை தாபித்து 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக புறக்கணிக்கப்பட்ட ரூபா 125.2 பில்லியனான நிலுவை வரி மற்றும் தண்டப்பணத்தை தீர்க்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், 2014 இன் 14 ஆம் இலக்க கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட வரி தீர்ப்பனவு (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் மூலம் இந்த நிலுவை வரியை அறவிடுவதற்கான மேலதிக ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. குறித்த பிரிவு தாபிக்கப்பட்டு 8 வருடங்கள் கடடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு புறக்கணிக்கப்பட்ட விரித் தொகையினை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2014 திசெம்பர் 12 ஆந் திகதியின் பின்னர் வரி மதியுரைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் தீர்ப்பனவு நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி வரையிலும் தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 32.5 பில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை வரிகள் மற்றும் தண்டப்பணங்கள் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு திணைக்களத்தினால் பெறுமதிசேர் வரி சேகரிப்பினை செயலற்றததாக்கிய வரியிறுப்பாளர்கள் 13 பேர் அமைச்சு மற்றும் 9 திணைக்களஙகளிடமிருந்து ரூபா 1.48 மில்லியன் அளவான பெறுமதிசேர் வரி சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், வரி அறிக்கைகளை சமர்ப்பித்தல் அல்லது திணைக்களத்திற்கு வரித் தொகையினை அனுப்பிவைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. செயலற்ற வரியிறுப்பாளர்களால் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளில் பெறுமதிசேர் வரியினை சேகரிப்பதனை தடுப்பதற்காக புதிய கணனிக் கட்டமைப்பினுள் நடைமுறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | செயலற்ற வரியிறுப்பாளர்களால் வரிப் பணத்தை சேகரிக்கப்படுவதனை தடுப்பதற்காக உரிய நடடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | இடை பதில்கள் வழங்கப்பட்டுள்ளதாக மற்றும் வினாவின் விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளதாக. |
| (இ) | பெறுமதிசேர் வரி தொடர்பில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் மாதிரியொன்றினை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணனிக் கட்டமைப்பின் தகவல்களுடன் பரிசோதிக்கும் போது 293 சுழற்சி வரியிறுப்பாளர்களால் அமைச்சு மற்றும் திணைக்களங்களுடாக சேகரிக்கப்பட்ட ரூபா 66.19 மில்லியனான பெறுமதிசேர் வரித்தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்படும் வரி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலைமை வெளிப்படுத்தப்பட்டு முறையான நடவடிக்கை எடுப்பதற்கான நடைமுறையொன்று புதிய கணனிக் கட்டமைப்பினுள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து திணைக்களங்கள் மற்றும் திணைக்களங்களில் வரியிறுப்பாளர்கள் சேகரிக்கும் பெறுமதி சேர் வரித் தொகை வரி அறிக்கைகளில் உரிய முறையில் அறிக்கையிடப்படுவதனை பரிசோதிப்பதற்காக நடைமுறையொன்றினை தாபிக்க வேண்டும் என்பது. | |
| (ஈ) | புதிய வரி நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் நிர்வகிக்கப்படும் 04 வரி வகைகளுக்குரியதாக 2016 சனவரி 01 முதல் 2018 யூன் 30 வரை வரியிறுப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவரி கோரிக்கைகள் 17,028 காணப்பட்டதுடன், மீளச் செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 15,334.5 மில்லியன் ஆகும். அவற்றினுள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் 5,078 வரி மீளச் செலுத்தல்களுக்காக நடவடிக்கை | வரி மீளச் செலுத்துதல்கள் தாமதிப்பதற்கு தாக்கம் செலுத்தியுள்ள விடயங்களை தேடிப்பார்த்து கணனிமயப்படு | அனைத்து அறிவித்தல்களுக்கும் வரி மீளச் செலுத்தல் மேற்கொள்ள வேண்டியதில்லை என்பதும், கொடுப்பனவு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| எடுப்பதற்கு கட்டமைப்பினுள் உத்தியோகத்தர்களுக்கு வேலை விடயங்கள் வெளியிடப்பட்டிருந்தது. அவ்வாறு வெளியிடப்பட்ட வேலை விடயங்களுக்கிடையே 2019 மே 14 ஆந் திகதியளவில் காசோலைகள் மூலம் 25 மீளச் செலுத்துதல்கள் உள்ளடங்கலாக 212 வரி மீளச் செலுத்துதல்கள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | த்தப்பட்ட வரி நிர்வாக கட்டமைப்பினுள் தாமதமின்றி வரி மீளச் செலுத்துதல்கள் இடம்பெறக்கூடியவாறு நடைமுறைய முறைப்படுத்தல வேண்டும் என்பது. | மேற்கொள்ளப்பட வேண்டிய கோரிக்கைகள் 5,078 இற்காக கட்டடைப்பினூடாக உத்தியோகத்தர்களுக்கு வேலை விடயங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், நியாயமான காலப்பகுதியினுள் தகவல்களை முன்வைக்காத வரியிறுப்பாளர்களின் வரி மீளச் செலுத்துதல்களை இரத்துச்செய்வதாகவும். |

## 4. <u>நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்</u>

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **<u>கணக்காய்வு அவதானிப்புகள்</u>** | **<u>பரிந்துரைகள்</u>** | **<u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u>** |
|---|---|---|
| நிறைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொர அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தமது விடயப்பொறுப்பிற்கு எடுக்கப்படும் விடயங்கள் தொடர்பில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சில் வினவப்பட்டுள்ளதாக |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 188 ஆக இருந்ததுடன், இது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 6.7 சதவீதமாகும். அவற்றுள் உள்நாட்டு இறைவரி சேவையிலான வெற்றிடங்கள் 101 காணப்பட்டதுடன், அது உள்நாட்டு இறைவரி சேவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 8 சதவீதமாகும். புதிய கணனி கட்டமைப்பிற்கமைய உருவாகும் வேலை உருப்படிகள் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்படுவதுடன், உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிலவுகின்றமை அந்த வேலை உருப்படிகளை நிறைவு செய்தல் தொடர்பில் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பது கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | உள்நாட்டு இறைவரித் சேவையின் III தரத்தின் 71 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாக. |
| (ஆ) | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் மீளாய்வாண்டின் முதலாவது காவாண்டினுள், 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் தமது வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரலடையாள இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேலும் மூன்று உத்தியோகத்தர்களின் 25 நாட்களுக்கு மேற்பட்ட நாட்களாக கைவிரலடையாள இயந்திரத்திற்கமைய வருகை / வெளிச்செல்லல் உறுதிசெய்யப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. எனினும், இந்த நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தாது குறித்த உத்தியோகத்தர்களுக்கு 2018 இன் முதலாவது காலாண்டின் ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து உத்தியோகத்தர்களும் செயற்பட வேண்டும் என்பது மற்றும் அவ்வாறு செயற்பட்டிராத உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | கைவிரலடையாள இயந்திரத்தினை பயன்படுத்தல் தொடர்பில் உள்ளக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக |